
தனிப்பிரதி - ரூ. 20/- ஆண்டு சந்தா- ரூ. 200/-

# முத்தமிழ் நேசன்

செப்டம்பர் 2022 மலர் 1 இதழ் 8 இனிக்கும் இலக்கிய இதழ்



## பெரியாருடன் இருந்தது வசந்தகாலம்

- அறிஞர் அண்ணா

**சிறப்பு கவிதைகள்**

மார்கழிப் பனியும் மாஞ்சோலைக் காற்றும்
சில்லென்று வீச சிலிர்க்கிறதே தேகம்!
மறுவைகளின் கீதம் பரவசம் அளிக்க...
கிழக்கு வானம் கம்பளி விரிக்க....
ஆனந்தம் கொண்டு ஆதவன் வருகிறான்.
ஏரும் கலப்பையும் வேகமாய் உழைக்க...
உயிரினம் அனைத்தும் உணவினைத் தேட....
வெளிச்சம் உதித்ததே விடியலும் பிறந்ததே



-தமிழ்மாமணி தாழை இரா.உதயநேசன்

# முத்தமிழ் நேசன்

## இனிக்கும் இலக்கிய இதழ்

செப்டம்பர் 2022 மலர் 1 இதழ் 8

நிறுவனர்

**தாழை இரா.உதயநேசன்**

**ஆசிரியர்**

த.அமுதா

**ஆசிரியர் குழு**

முனைவர்

ஜோ.சம்பத்குமார்

கவிஞர் செ.வீரமணி

த.ஓவியா

**வடிவமைப்பு**

ம.சேவியர்

**அச்சு**

M.S ஆப்செட் ராயப்பேட்டை



**அலுவலக முகவரி**

முத்தமிழ் நேசன்

எண்:10, முதல் தெரு,ஸ்ரீராமபுரம்

ஆம்பூர் - 635 802

திருப்பத்தூர் மாவட்டம்


## தலையங்கம்

# விருது பெறுவோருக்கு வாழ்த்துக்கள்

இந்த 2022-க்கான சாகித்ய அகடமியின் யுவ புரஸ்கார் விருது 'தனித்திருக்கும் அரளிகளின் மதியம்' என்ற கவிதை நூலுக்காக பொள்ளாச்சியைச் சேர்ந்த கவிஞர் ப.காளிமுத்துவுக்கும், பால யுவ புரஸ்கார் விருது, 'மல்லிகாவின் வீடு' என்ற சிறுவர் சிறுகதைத் தொகுதிக்காக எழுத்தாளரும், ராணி இதழின் ஆசிரியருமான ஜி.மீனாட்சிக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு நம் முத்தமிழ்நேசன் இதழின் சார்பில் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

விருது பெற்றவர்களில் ஒருவரான மீனாட்சி, நீண்டகால படைப்பிலக்கியப் பயிற்சி உடையவர். கவிஞர் காளிமுத்துவோ, வெறும் 25 வயதேயுடைய இளைய படைப்பாளி. இந்த வயதில் தன் முதல் தொகுப்புக்கு இந்தியாவின் பெரிய விருதுகளில் ஒன்றான யுவ புரஸ்கார் விருதைப் பெற்றிருக்கிறார் என்றால், அவரது ஆற்றல் மகிழ்வையும் உற்சாகத்தையும் தருகிறது.

விமர்சனங்களைப் பற்றிக் கவலைப்படாமல், விருது பெற்ற இரண்டு படைப்பாளிகளையும் இதய மகிழ்வோடு வாழ்த்தி மகிழ்வோம்.

**த.அமுதா**

ஆசிரியர்


இதழுக்குப் படைப்புகளை அனுப்ப விரும்பும் படைப்பாளிகள்,

யுனிகோட் (unicode) எழுத்துருவில் மட்டுமே தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.

படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:

**mutamilnesan2022@gmail.com**



# பெண்மொழி

ஏற்றமுறு பெட்டகமே
என்னுளத்தின் அட்சயமே
ஏந்திழையே முடங்காதே
எழுச்சியதும் உன்கையில்!

போற்றுகின்ற நிலவுப்பெண்
உறுதோழி உந்தனுக்கு
போதுமட்டும் கண்மூடி
கனவதனைக் கூறிவைப்பாய்!

சாற்றிடுவாய் சட்டங்கள்
சங்கடங்கள் அகற்றிடுவாய்
சாதனைகள் புரிவதற்கு
தடைகளென ஏதுமில்லை!

கூற்றுவனே வந்தாலும்
குறிப்பறிந்து செயல்பட்டு
குன்றெனவே நிமிர்ந்திடுவாய்
குன்றிடாத பெண்மொழியே!

நாற்றிசையும் நண்ணிநின்றே
நல்லபணி ஆற்றுகின்ற
நங்கையுனக் கீடாக
நானிலத்தில் யாருமில்லை.



**- திருமகள் சிறிபத்மநாதன்**
**பிரித்தானியா.**



# நட்பதிகாரம்

மாறுகின்ற உலகமதில் மாறாத உறவு
ஊறுகின்ற நீராய் உளமதில் நட்பு
ஆறுகின்ற நிழலாய் அனுதினம் நட்பு
தூறுகின்ற மழையின் துளியோ மண்ணில்!

என்னைச் செதுக்கிய எழில்நிறை நட்பு
தன்னை வருத்தி தந்திட்ட உதவி
கன்னல் சுவையாய் கருத்துடன் நாளும்
இன்னல் நீக்கி இன்பம் அளிக்கும்!

மனித வாழ்வில் மயங்கிடும் உறவுகள்
இனிய வாழ்வில் இருந்திடும் உறவுகள்
பனியது விலகும் பகலவன் வருகை
மனிதரும் விலகுவர் மாபெரும் துயரில்!

அதிசய உறவாய் அகமதில் புதைந்து
எதிர்பார்ப்பு ஏதும் எண்ணத்தில் கொள்ளா
உதித்த நல்லுறவு உயிரான நட்பு
எதிலும் கூடவே எழிலாய் எம்முடனே!

அகநக நட்பாய் அன்பினைக் கொடுத்து
அகமது நிறைய ஆண்டிடும் உறவு
முகநக நட்பின்றி முழுமையாய் நட்பாகி
அகநக நட்பாய் ஆளும் சக்தி!

எண்ணமும் செயலும் ஏற்றமாய் நட்பு!
மண்ணும் விண்ணும் மயங்கிடும் நட்பு!
கண்ணில் நிறைந்த காட்சியாய் நட்பு!
உண்மை கொண்ட உரிமையாய் நட்பு!
நட்பில்லா வாழ்க்கை உப்பில்லா உணவு!



**–சுகுணா சுதாகரன்,**
**பிரித்தானியா**

# வலை வீசும் மீன்காரி

மீன்விற்கும் சந்தையில
மீன்காரிப் போவையில
மாடபுறா என்னழகில்
மீன்வாசம் மணக்குதடி
எண்ணூரு சந்தையில
எழிலாகப் போவையில
கடலாடும் கட்டழகன்
கண்ணடிச்ச கோலமதில்
மங்கையவள் மனசுக்குள்ளே
செவ்வந்திப் பூவழகாம்
மன்னார்குடி சேலயில

மறைந்திருக்கும் தேரழகாம்
மீன்விற்க போயிவந்தேன்
மீன்காரி வலைவீசி
கல்யாண சந்தையிலே
கட்டழகன் தேடிவந்தேன்
ஏழுமலை கோயிலிலே
என்னழகன் கூடசென்று
காதலித்து கைபுடிச்சேன்
கல்யாணச் சோலையிலே

**நான் அவள் இல்லை**

வலை வீசும் மீன்காரி
கயல் விழியால்
வலை வீசுறா!
பயல் அவனை
விலை பேசுறா!
அயிரை வயிரை
இடையில் ஏந்துறா!
ஓங்கில் போலே
தரையில் நீந்துறா!
கெளுத்தி கழுத்தில்
சுண்டி இழுக்குறா!
வாளைத் தொடையா
அவளும் வழுக்குறா !

நெத்திலி போல
நெத்திய உயர்த்துறா!
வஞ்சிர அழகில்
வஞ்சியும் வார்க்குறா!
மீனைக் காட்டி
வலையும் விரிக்கிறா!
மீனவன் அவனை
வலையில் வீழ்த்துறா !

**கவிரதன்**

தலைமேல கூடவெச்சு
குப்பத்துக்கு போறவளே....
கூடயில என்னமீனு
வெச்சிகிட்டு போறியலோ
அக்கப்பக்கம் பாக்குறியே
யாரைத்தான் தேடுறியோ
வலைவீசும் மீன்காரியே
மனசுக்குள்ள யார்தானோ
வண்ண வண்ண சேலை கட்டி
வடிவாக பொட்டும் வெச்சு
கொண்டையில பூவும்சூடி
கண்ணழகோ பேரழகே
பார்ப்போரை மயக்குறியே
அன்ன நடையழகே
சின்ன இடையழகே
ஓமேல ஆசபட்டே
ஓடோடி வந்தேனே
ஒன்னத்தான் கட்டிக்கிட்டு
காலம்பூர வாழனும்

**நஸீறா வதூக்**



வலைவீசும் மீன்காரி
வாயுள்ள கைகாரி
வெலபோகா மீனையும்
வெலைக்கு வித்திடுவாள்!
அழகாகக் கதபேசி
ஆள மசக்கிடுவாள்
காரியத்தில் எப்போதும்
கண்ணாய் இருந்திடுவாள்!

பார்வை ஒன்றாலே
பாடம் புகட்டிடுவாள்!
பச்சரிசிப் பல்லாலே
பாசாங்கு செஞ்சிடுவாள்!
பக்கத்தில் வந்தாலே
மீன்வாடை வீசிடுவாள்!
பார்ப்போர் மனசப்
பாடாய் படுத்திடுவாள்!
கட்டான உடலாலே
சிட்டாய்ப் பறந்திடுவாள்!
கன்னியிலே சிக்காத
கானான் குருவியவள்!

**எம்.எச்.எம்.மன்சூர்**

கலையான கண்ணழகி
வலைவீசு மீன்காரி
காலைப் பொழுதோடு
சிலையாக வந்தாலே
நடையில பேரழகி
கூடையிலே என்னை
இடையிலே வளைகிற
இதயத்தை இழுக்கிற
சிரிப்பில மலர்
சிந்திக்குது உயிர்

சிக்கான கூந்தலிலே
சிக்கிக்கிச்சு மலரு..
தேனாய். மொழிகள்
தேடுது விழிகள்
தென்றலாய் தீண்டுது
தெம்மாங்கு பாடுது
வாழ்க்கையில் வந்திடு
வசந்தத்தை தந்திடு
வருகை எதிர்பார்த்து
வாழ்க்கை இருக்குது

**ஆர். சோமு சாவித்திரி**



# எங்கே அந்தக் குயில்..?

– தாழை.இரா.உதயநேசன்

வசந்தனும் அகல்யாவும் அழகானதோர் வாழ்க்கையை ஆரம்பித்து இருபது வருடங்கள் ஆகிவிட்டன.

இனிமையான காதலில் ஆரம்பித்து அவர்களின் வாழ்க்கை கல்யாணத்தில் முடிந்தது. சில வருடங்கள்வாழ்க்கை நன்றாக அமைந்தது. அவ்வப்போது சண்டைகள், சச்சரவுகள், வாக்குவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தது .

வசந்தன் அகல்யாவைக் காதலித்துக் கரம்பிடித்ததால், அவளின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் அடங்கிப் போயிருந்தான். வசந்தனின் பெற்றோர்கள் உட்பட சகோதர சகோதரிகளுக்கும் ஆச்சரியம். ஆளுமை மிகுந்த தங்களின் அண்ணன் அடங்கிப் போயிருந்த நிலையையெண்ணி மனதிற்குள் கவலைப்பட்டாலும் அதை யாருமே வெளிக்காட்டவில்லை.

தனியார் துறையில் வேலை செய்துவந்த வசந்தன், ஊர்மக்கள் மெச்சிக்கொள்ளும் உத்தமனாகவும், தலைவனாகவும் இருக்கின்றான். இருப்பினும் அவனது வாழ்க்கை இப்படியாகுமென கொஞ்சம் கூட நினைத்ததில்லை. எந்தக் காரியமானாலும், ஊர்மக்கள் வசந்தனின் பேச்சையும் ஆலோசனையையும் கேட்கத் தவறுவதில்லை. அழகான அந்த நினைவுகளை அசைப்போட்டுக் கொண்டிருந்தான் வசந்தன்.

“என்ன... மரம் மாதிரி ஒரே எடத்துல நின்னுக்கிட்டு இருக்கீங்க..? அப்படி என்ன யோசன..?” படபடத்தாள்அகல்யா.

“அது ஒண்ணுமில்ல அகல்யா...”– அமைதியாகச் சொன்னான் வசந்தன்.

“ஆமா... நெனப்புத்தான் பொழப்பக் கெடுத்துச்சாம்... போய் இருக்கிற வேலையப் பாருங்க. என்னோட சம்பாத்தியத்துல

சோறு, உடைவாங்கி பெரிய ஆளா வர்றது ஒன்னும் பெரிய கவுரவம் இல்ல. இந்தப் பொழப்புக்கு...சீ..... தூ....."– காறி சுவற்றில் எச்சில் துப்பினாள் அகல்யா.

வசந்தனின் மனது வழக்கம் போல அழுதுகொண்டிருந்தது.

தனியார்துறையில் செய்துவந்த வேலை திடீரென இப்படி பறிபோகுமென்று வசந்தன் நினைத்துக் கூட பார்க்கவில்லை. கம்பெனி பெரும் நஷ்டத்தில் இயங்கியதால், அதை இழுத்து மூடிவிட்டு அங்கு வேலை செய்து வந்தவர்கள் அனைவரையும் வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள்.

வேலை இழந்து வீட்டிற்கு வந்ததிலிருந்து, அகல்யாவின் அணுகுமுறை தலைகீழாக மாறிப்போனது. காதல் கணவன் என்று கூட பார்க்காமல், தொட்டதிற்கெல்லாம் எடுத்தெறிந்து பேசுவதும், மரியாதைக் குறைவாக நடத்துவதுமாக இருந்தாள். அவளின் நடவடிக்கையும் பேச்சுக்களும் வசந்தனுக்குப் பழகிவிட்டது. தன்னுடைய வாழ்க்கை இப்படியாகி விட்டதே என்று வசந்தன் வருந்தாத நாளில்லை.

மனதாரகாதலித்த அகல்யா தனக்கு மனைவியானபோது, தன் வாழ்க்கையை எண்ணி மிகவும் சந்தோசப்பட்டான் வசந்தன். அவளின் அன்பும், கரிசனையும் அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. ஆனால் இன்றோ, வேலையில்லாததினால், அகல்யாவின் குணங்கள் மாறியதோடு, குழந்தைகளையும் தன்பால் வைத்துக் கொண்டாள்.

நான்கு சுவர்களுக்குள் நடந்துவந்த அந்த அவமரியாதை ஒருநாள் வீதிக்கும் வந்தது.

வீட்டிற்கு வெளியே நின்று, அன்று அவள் பேசிய வார்த்தைகள் எல்லாம், இன்றும் வசந்தனின் மனதில் முள்ளாய்க் கிழித்துக் கொண்டிருக்கிறது. பெயர்தான் வசந்தன். அவன் வாழ்க்கை என்னவோ வசந்தம் இல்லாமற்போனது ஏனோ வேடிக்கை..!

இத்தனை வேதனை, அவமானங்கள் மத்தியிலும் வசந்தன் கொஞ்சமும் தளராமல் வேலை தேடிக்கொண்டிருந்தான். அவன் முயற்சிகளுக்குப் பலன் கிடைத்தது என்று தான் சொல்லவேண்டும்.

ஒரு மாதாந்திரப் பத்திரிக்கை அலுவலகத்தில் குறைந்த ஊதியத்தில் வேலை கிடைத்தது. வீட்டில் மனைவியின் வார்த்தைகளைக் கேட்டு மனம் நொந்துப் போவதைவிட, ஊதியம் குறைவாக இருந்தாலும் பரவாயில்லையென்று அந்த வேலையில் சேர்ந்தான் வசந்தன். அவனுக்கு அந்த வேலை நிம்மதியைக் கொடுத்தது. அவன் மனதில் பதிந்திருந்த எண்ண அலைகள் யாவும் அச்சில் கவிதை, கதைகளாக வெளிவந்தது. அந்த எழுத்துக்களே அவனுடைய ஆறுதல். ஒரே வீட்டில் இருந்தாலும்.... தூக்கம் ஏனோ தனித்தனியே தான். யாருடனும் அதிகம் பேசுவதில்லை.

தூங்குவதற்காக மட்டும் வசந்தன் வீட்டிற்கு வருகிறான். என்றோ ஒருநாள் தன்னுடைய வாழ்க்கைத் திரும்பி வருமென்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டாலும்... அவன் மனது மட்டும் தான் காதலித்த அந்தக் குயிலை இன்னும் தேடிக் கொண்டிருக்கிறது...!

வசந்தன் தேடும் விடியல் அவனுக்குக் கிடைத்திட நாமும் வாழ்த்துவோம்..!!

# மன வீணை ராகங்கள்



அந்த ஒற்றை வார்த்தைத்தான்
உன்னை புரட்டிப்போடுமென
அப்போதே தெரிந்திருந்தால்
ஆயிரம் வார்த்தைகள் வார்த்திருப்பேன்
அன்று அந்த
ஒற்றை வார்த்தைக்கு
வெட்கப்பட்டு நின்ற நீ
மூச்சுவிடத் தினறிய நீ
என் அடுத்த வார்த்தைக்கும்
காத்துக்கிடந்தாய் என்பது
அப்போது தெரியாமல் போய்விட்டது
சொல் சுகம் தருமென
நீ சொல்லாதவரை
எனக்குத் தெரியாது
உன் மௌனத்தை
மொழி பெயர்த்துப் பார்க்க
தவறிப்போனேன்
எனக்கு இன்னும்
நன்றாக நினைவிருக்கிறது
நீ சத்தம் போட்டு சிரித்த
அந்த சாயங்காலப் பொழுதும்
நீ மௌனமாய்  கடந்து போன
அந்த மாலைப் பொழுதும்
அந்த ஒற்றை வார்த்தைத்தான்
உன்னை புரட்டிப்போடுமென
அப்போதே தெரிந்திருந்தால்
ஆயிரம் வார்த்தைகள் வார்த்திருப்பேன்

இதயத்தில்
உன்னை மட்டுமே
சுமக்கிறேன் என்றான்
சரி எடை வைத்து
முடிவு செய்து
கொள்ளலாமென
அவன் இதயம்
எடை வைக்கப்பட்டது
எல்லைமீறிப் போனது எடை
என்னை மட்டும் சுமப்பதாய்
சொன்னது பொய்தானே?
என்னோடு சேர்த்து
இன்னும்
எத்தனைப்பேரை சுமக்கிறாய்?
எல்லைமீறி போகிறதே எடை!
அவன் எதுவும் பேசாமல்
எடையை பார்த்தபடி நின்றான்
தராசு தட்டில் இருந்த
இதயம் பேசியது
அந்த நான்கு பேருக்காக
துடிப்பது கூட வலிக்கவில்லை
உனக்காக துடிப்பது தான்
உசுரே போகிறது என்று
இதயத்துக்கு நடிக்கத் தெரியாது
துடிக்க மட்டுமே தெரியும்
உண்மையை சொல்
அந்த நான்கு பேர் யார்?

என்னை
உடைத்து நொறுக்க
உங்களுக்கு
எத்தனை மணி நேரம்
வேண்டுமோ
எடுத்துக் கொள்ளுங்கள்
என்னை
விமர்சனம் செய்ய வேண்டுமா?
கொஞ்சம் உடனே செய்யுங்கள்
என்னை
பழி சுமத்த வேண்டுமா?
பரவாயில்லை பழி சுமத்துங்கள்
எதுவாயினும் உடனே செய்யுங்கள்
நான் அரசியலில் உயர
ஆதார் கார்டைப் போல
இவை அனைத்தும்
எனக்கு
அவசரமாய் தேவைப்படுகிறது
என்னை உடைத்து நொறுக்க
உங்களுக்கு
எத்தனை மணி நேரம் வேண்டும்?
எடுத்துக் கொள்ளுங்கள்.






–கவி..செல்வராணி

# நதியோடு விளையாடு

**அமெரிக்க முத்தமிழ் இலக்கியப்பேரவையின் 7 வரிக்கவிதைப் போட்டிக்கு வந்த கவிதைகளில் சில..**



நிறுவனர்

**தாழை இரா.உதயநேசன்**



நடுவர்

**சுமதி சிவகுமார்**

கவலைகள் மறந்து களிப்புடன் இணைந்து
தண்ணீர் மேலாய்த் தாவும் மீன்கள்
ஆனந்தம் பொங்கும் அன்பாய்த் தங்கும்
இளமைப் பருவம் இயற்கையின் வரமே
நதியோடு விளையாடி நாணலாய் வளைந்தாடி
நட்பில் கலந்து நனையும் உடல்கள்
சாதிகள் அழித்துச் சரித்திரம் படைக்கும்

**– ஏரூர் ஆஸாத் கமால்**

நதியில் விளையாடி நாணலாய் வளைந்து
நலம்பல பெறவே நதிநீர் பயனாக்கி
நிலங்கள் திருத்தி இயற்கை விவசாயம்
இனிதே செய்திட இளைஞர்கள் யாவரும்
ஏற்று நடத்திட ஏற்றம் பெறலாம்
சுயமாய் வேலை சுதந்திரமாய்ச் செய்யலாம்
நாட்டின் பொருளாதாரம்
நல்லபடி உயர்த்தலாம்.

**– கே.கோவிந்தன் வாலாஜா**

அள்ளும் சிரிப்பினிலே ஆனந்தம் மிஞ்சிடவே
துள்ளும் இளமையிலே இன்பங்கள் பொங்கிடவே
மாலைப் பொழுதினிலே மனதும் மகிழ்ந்திடவே
பசுமை நிறைந்த நதிக்கரை அசைவினிலே
வெள்ளை மனதோடு நதியோடு விளையாடு
பரவசமாய் தோன்றுமே பழைய நினைவுகளும்
உள்ளத்தில் நிறைந்து அழியாமல் வாழ்ந்திடுமே

**– அப்துல் ஹக்கீம்**

நதியோடு விளையாடி நலமாக உறவாடி
நாளைக்கும் வந்து இங்கே குளிப்போமா?
அழகான நீரோடை ஆனந்தம் தருகிறது
அதனுள்ளே சுழியோட ஆசையாய் இருக்கிறது
உடல் எல்லாம் குளிர் எடுத்து
நடுக்கம் பிடித்து ஆட்டம் எடுத்தாலும்
மனசிற்குள் இன்பம் மாறாது நிற்கிறது.

**– எம்.எச்.எம்.மன்சூர்,**

நதியோடு விளையாடி நன்றாக நீராடி
சிறிய வயதிலே இன்பங்கள் பலகோடி
இணைந்து வாழ்வதே மனதுக்கு இதமாகும்
இருக்கின்ற எல்லாமே
எல்லோருக்கும் பொதுவாகும்
நதியும் கடலும் விண்ணும் மண்ணும்
படைத்தவன் ஒருவன் அவனுக்கே சொந்தம்
சிறுவரின் நெஞ்சிலே பொங்கட்டும் மகிழ்ச்சி.

**– பாலன் திரு**

கரைபுரண்டு ஓடும் காவிரி நீரில்
களிப்பாய் நட்புடன் குளிப்போம் ஊரில்
நீச்சல் சாதனை நிச்சய விளையாட்டு
நித்தமும் கும்பலின் மகிழ்ச்சி களைகட்டும்
விடுமுறை வந்தால் நதிதான் வீடு
சடுதியில் நடந்த சண்டைகள் மறக்கும்
சந்தோசம் மாத்திரம் நினைவில் இனிக்கும்

**– முனைவர் 'கண்மணி'-கண்ணன்.**

நதியோடு விளையாடி ஆனந்தம் கொண்டிடு
நண்பர்கள் சூழ்ந்திட இனிமை கண்டிடு
உள்ளத்தில் மகிழ்வு தானாய் வந்திடும்
முங்கி எழுந்திட மேனி நடுங்கிடும்
நெஞ்சம் களித்தே இல்லம் மறந்திடும்
போதும் என்ற எண்ணங்கள் இல்லை
பெருகிடும் ஆசை அதுவே தொல்லை

**– தஞ்சை பழ வள்ளியப்பன்**

நதியோடு விளையாடி நண்பனுடன் கூடி
நீரினை அலைந்து வீசியே மகிழ்ந்து
தங்கையுடன் தண்ணீரில் நின்று உடனிருந்து
உவகை பெருகி ஒன்றாய் சூழ்ந்து
நேரம் செல்வது கூட அறியாது
அனபுடனே ஆற்றில் அகம் குளிர
ஆடி ஓடி ஆனந்தமாய் ஆடினரே

**– காமேஸ்வரன் வெங்கடகிருஷ்ணன்**

பள்ளி விடுமுறையில் பால்ய நண்பர்களுடன்
கிராமத்தில் ஓடிவரும் வாய்கால் தண்ணீரிலே
ஒன்றாகக் கூடியே உவகையுடன் நீராடி
குதித்து விளையாடி எதிர்நீச்சல் போட்டு
கும்மாளம் அடித்தே மகிழ்வுடன் இருந்தோம்
வெயில் காலத்தில் வெப்பம் தணிந்தே
ஆரோக்கியமான வாழ்வை
அனுபவித்தே வாழ்ந்தோம்

**– அ.பன்னீர்செல்வம்.**

ஓடுகின்றத் தண்ணீரு உள்ளத் தூய்மையிலே
ஆடுகின்ற மனத்தோடு ஆனந்த குளியல்
எண்ணம் போலவே எழுந்து ஆடு
பண்ணும் இயற்கை பாங்கினில் தோய்ந்து
முன்னும் பின்னும் முனைந்து பாய்ந்து
நதியோடு விளையாடு நெஞ்சம் மகிழ்ந்தாடு
குதித்து நீந்து குறியாய் இருந்துமே.

**– வில்லவன் மல்லி (கோ.அருச்சுணன்)**



# பெரியாருடன் இருந்தது வசந்தகாலம்

- அறிஞர் அண்ணா

“எனக்கென்று, ஒரு ‘வசந்தகாலம்’ இருந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு, ஆண்டு பலவற்றுக்குப் பிறகு அந்த வசந்த காலத்தை நினைவிலே கொண்டு, இன்றைய கவலை மிக்க நாட்களிலே எழமுடியாத புன்னகையைத் தருவித்துக் கொள்கிறேன். பெரியாருக்கு அந்த ‘வசந்தகாலமும்’ தெரியும்; இன்று பொறுப் பேற்றுக் கொண்டிருப்பதால் எழுந்துள்ள கவலையும் நன்கு புரியும்.

‘வசந்தகாலம்’ என்றேனே அந்த நாட்களில் நான் கல்லூரியிலிருந்து வெளியேறி, அவருடன் ‘காடு மேடு’ பல சுற்றி வந்த நிலை. அந்தக் காடுமேடுகளில் நான் அவருடன் தொண்டாற்றிய போது வண்ண வண்ணப் பூக்கள் குலுங்கி மகிழ்வளித்ததைக் கண்டேன்; நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன்.

அப்போது ‘கலவரம் எழாமல்’ ஒரு பொதுக்கூட்டத்தை ஒழுங்காக நடத்தி முடித்திட முடிந்தால் போதும்-பெரிய வெற்றி என்றே பெருமிதம் தோன்றும். புறப்படுமுன்னர், தலைபோகும் தாடி போகும் தடி போகும்-உயிர் போகும் என்ற

மிரட்டல் கடிதங்களைப் படித்திட வேண்டிய நிலை.

அண்ணாதுரை! இதைப் பார்த்தாயா! என்று ஒரு கடிதத்தை வீசுவார்– ஆமாமய்யா! என்று பொருளற்ற ஒரு பதில் தருவேன். வருகிறாயா? என்று என்னைக் கேட்கமாட்டார் வருவேன் என்பது அவருக்கு நன்கு தெரியுமாதலால், செல்வோம், பெரியாரின் பேருரை நிகழ்த்தப்படும். வந்தவர்களில் உருட்டல், மிரட்டல் கடிதம் எழுதியவர் இருந்திருப்பின், அடுத்த கூட்டத்திற்கு அவர் அய்யாவிற்காக 'மாலை' வாங்கிக்கொண்டுதான் வருவார்! அத்தகைய தெளிவும், வாதத்திறமையும் பேச்சில் கிடைக்கும். அத்தகைய தெளிவுரை பெற்றுப் பெற்று, தமிழரில் பலர், பலப்பல திருந்தினர் என்பது மட்டுமல்ல, தமிழகத்திலேயே ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டு விட்டிருக்கிறது.



ஒருவர் புறப்பட்டு ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி, ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும், எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றிபெற்ற வரலாறு இங்கின்றி வேறெங்கும் இருந்ததில்லை.

அந்த வரலாற்றிலே புகழேடுகள் புதிது புதிதாக இணைக்கப் பட்ட நாட்களிலே ஒரு பகுதியில், நான் அவருடன் சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன். அந்த நாட்களைத்தான் என் 'வசந்தம்' என்று குறிப்பிட்டிருக்கிறேன். பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர் பற்பலர். அவருடன் மற்றப் பலரைவிட இடை விடாது இருந்திருக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தவன் நான். அந்த நாட்கள் எனக்கு மிகவும் இனிமையான நாட்கள்; இன்றும் நினைவிலே கொண்டுவரும்போது இனிமை பெறுகின்றேன்.

எத்தனை எத்தனையோ கருத்துக்களை உரையாடலின் மூலம் தந்திருக்கிறார். 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்பதனை நான் கற்றுணரும் வாய்ப்பும் தந்தார். பொதுத் தொண்டாற்றுவதில் ஓர் ஆர்வமும் அக மகிழ்வும், மன நிறைவும் பெற்றிடச் செய்தார்.


கோபத்துடன் அவர் பலரிடம் பேசிக் கண்டிருக்கிறேன்; கடிந்துரைக்கக் கேட்டிருக்கிறேன்; 'உன்னை எனக்குத் தெரியும் போ!' என்று உரத்த குரலில் கூறியதைக் கேட்டிருக்கிறேன். ஒருநாள் கூட அவர் என்னிடம் அவ்விதம் நடந்து கொண்டதில்லை. எப்போதும் ஒரு கனிவு, எனக்கென்று தனியாக வைத்திருப்பார். என்னைத் தனது குடும்பத்தில் பிறவாப் 'பிள்ளை' எனக் கொண்டிருந்தார்.

நான் கண்டதும் கொண்டதும் அந்த ஒரே தலைவரைத்தான். இப்போது நான் உள்ள வயதில் அவர் இருந்தார். நான் அவருடன் இணைந்தது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு.

அதற்கு முன் முப்பது ஆண்டுகள் அவர் பணியாற்றி வந்திருக்கிறார். இந்த 'ஆண்டுகள்' தமிழரின் வரலாற்றிலே மிக முக்கியமான ஆண்டுகள். 'திடுக்கிட வைக்கிறாரே! திகைப்பாக இருக்கிறதே!

எரிச்சலூட்டுகிறாரே! ஏதேதோ சொல்கிறாரே!' என்று கூறியும், விட்டுவைக்கக் கூடாது! ஒழித்துக்கட்டியாக வேண்டும்! நானே தீர்த்துக் கட்டுகிறேன்!' என்று மிரட்டியும் தமிழகத்துள்ளாரில் பலர் பேசினர்; ஏசினர்; பகைத்தனர்; எதிர்த்தனர்; ஏளனம் செய்தனர்; மறுப்பு உரைத்தனர்.

அவருடையபேச்சோ! அதுதங்குதடையின்றி வேகம் குறையாமல் பாய்ந்தோடி வந்தது. மலைகளைத் துளைத்துக் கொண்டு, கற்களை உருட்டிக்கொண்டு, காடுகளைக் கழனி வளம் பெறச் செய்துகொண்டு ஓசை நயத்துடன், ஒய்யார நடையுடன்! அங்கே பேசுகிறார், இங்கே பேசுகிறார், அதைக்




ஆனால், அவர் பேச்சைக் கேட்ட வண்ணம் இருந்தனர். மூலையில் நின்றாகிலும், மறைந்திருந்தாகிலும் அந்தப் பேச்சு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்தபடி இருந்தது. எதிர்த்தவர்கள், ஏளனம் புரிந்தவர்கள், ஏனோதானோ என்று இருந்தவர்கள் தத்தமது நிலை தன்னாலே மாறிடக் கண்டனர்; கொதித்தவர்கள் அடங்கினர்; மிரட்டினோர் பணிந்தனர்; அலட்சியம் செய்தோர் அக்கறை காட்டினர்; குறித்துப் பேசுகிறார், இது குறித்துப் பேசுகிறார் என்று தமிழகம் இந்த ஐம்பது ஆண்டுகளாகக் கூறிவருகிறது.

மனத்திற்பட்டதை எடுத்துச் சொல்வேன் எது நேரிடினும் என்ற உரிமைப் போர் அவருடைய வாழ்வு முழுவதும் அதிலே அவர் கண்ட வெற்றி மிகப்பெரியது. அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்திடவில்லை; இன்று அனைவரும் பெற்றுள்ளனர். அந்த வெற்றியின்

விளைவுகளை இந்தத் தமிழகத்தில் தூய்மையுடன் மனத்திற்குச் சரியென்று பட்டதை எவரும் எடுத்துரைக்கலாம் என்ற நிலை உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. அறிவுப் புரட்சியின் முதல்கட்ட வெற்றி இது! இதற்கு முழுக்க முழுக்க பொறுப்பாளர் பெரியார்! இந்த வெற்றி கிடைத்திட அவர் ஆற்றிய தொண்டின் அளவு, மிகப்பெரியது.

தமிழகத்தில் இன்று அவரால் ஏற்பட்டுள்ள இந்த நிலை இந்தியாவில் வேறு எங்கும் காண முடியாது. பிற பகுதியினர் இதுபற்றிக் கேள்விப்படும்போது வியர்த்துப் போகின்றனர். அப்படியா! முடிகிறதா! நடக்கிறதா! விட்டு வைத்திருக் கிறார்களா! என்று கேட்கிறார்கள்! சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு.



அரித்துவாரம், கல்கத்தா, பாட்னா, கான்பூர், காசி, லாகூர், அலகாபாத், அமிர்தசரஸ் மேலும் இதுபோன்ற பல நகர்களில் என்னையும் உடன் அழைத்துக் கொண்டு பெரியார் சுற்றுப்பயணம் செய்தபோது, ஒவ்வொரு ஊரிலும் இதுபோலத்தான் கேட்டனர். யார்? அந்த ஊர்களிலே உள்ள பகுத்தறிவு வாதிகள்!

அந்த இடத்துப் பகுத்தறிவுவாதிகள் படிப்பார்கள்–பெரிய பெரிய ஏடுகளை! எழுதுவார்கள் அழகழகான கட்டுரைகளை! கூடிப்பேசுவார்கள் சிறிய மண்டபங்களில், போலீசு பாதுகாப்புப் பெற்றுக்கொண்டு! இங்கு?

இங்கா! இவர் பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணறாத ‘பழமை’ உண்டா? எதைக் கண்டு அவர் திகைத்தார்! எதற்கு அவர் பணிந்தார்? எந்தப் புராணம் அவரிடம் தாக்குதலைப் பெறாதது! ‘ஏ! அப்பா! ஒரே ஒருவர், அவர் நம்மை அச்சு வேறு, ஆணி வேறாக எடுத்தெடுத்து வீசுகிறாரே’ என்று, இந்நாட்டை என்றென்றும் விடப் போவதில்லை என்று எக்காளமிட்டுக் கொண்டிருந்த ‘பழமை’ அலறலாயிற்று! புதுப்புது பொருள் கொடுத்தும், பூச்சு மெருகு கொடுத்தும், இன்று பழமையின் சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்றாலும், விழுந்த அடியால் அடித்தளம் நொறுங்கிப் போய் விட்டிருக்கிறது என்பதனை அறியாதார் இல்லை!



எனவே தான் பெரியாருடைய பெரும் பணியை, நான் ஒரு தனி மனிதனின் வரலாறு என்றல்ல, ஒரு சகாப்தம் ஒரு கால கட்டம் ஒரு திருப்பம் என்று கூறுவது வாடிக்கை.



அக்கிரமம் தென்படும் போது, மிகப் பலருக்கு அது தன்னைத் தாக்காதபடி தடுத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும், ஒதுங்கிக்கொள்வோம் என்ற பாதுகாப்பு உணர்ச்சியும்தான் தோன்றும்; எதிர்த்து நிற்க வேண்டும் என்ற எண்ணம் எளிதில் எழுவதில்லை.

பெரியார் அக்கிரமம் எங்கு இருந்திடக் கண்டராலும், எந்த வடிவிலே காணப்படினும், எத்துணை பக்க பலத்துடன் வந்திடனும் அதனை எதிர்த்துப் போரிடத் தயங்குவதில்லை.

அவர் கண்ட களம் பல; பெற்ற வெற்றிகள் பலப்பல! அவர் தொடுத்த போர் நடந்தபடி இருக்கிறது! அவர் வயது 89! ஆனால், போர்க்களத்திலேதான் நிற்கின்றார்!!

அந்தப் போரிலே ஒரு கட்டத்தில் அவருடன் இருந்திடும் வாய்ப்பினைப் பெற்ற நாட்களைத்தான் ‘வசந்தம்’ என்று குறிப்பிட்டேன்.

மேலும் பல ஆண்டுகள் அவர் நம்முடன், நமக்காக வாழ்ந்திருக்கவேண்டும். தமிழர் வாழ்வு நல்வாழ்வாக அமைவதற்கு, பன்னெடுங்காலமாக இருந்துவரும் கேடுகள் களையப்படுவதற்கு அவருடைய தொண்டு தொடர்ந்து அளிக்கப்பட்டுவரும் என்பதில் அய்யமில்லை.

வாழ் பெரியார்!”

**( தந்தை பெரியார் 89–ம் ஆண்டு பிறந்தநாள் “விடுதலை” மலருக்கு எழுதிய கட்டுரை)**



# மெழுகுவர்த்தி

அருகருகே மேசைகள் இருந்தாலும்
அந்த மேசையில் மட்டும்
அவன் அவளின் பெயர்கள்
எழுதப் பட்டிருந்தன!
தன் இதயத்தின் ஹார்ப் நரம்புகளை
நாவால் அலையவிட்டு மெல்ல
இழைக்கத்தொடங்கினாள்
பிரபஞ்சக்கூழ் உறையத் தொடங்கியது!
பெட்டகத்தைத் திறந்தவன்
நியான் கதிர்களை வண்ணத்தில் குழைத்து
சித்திரங்களைத் தீட்ட
வெளிச்சப்பூக்கள் விரல்களைத் தழுவி
இதழ்களின் வழியே நழுவ
பளிங்கு பரல்கள் உருளத் தொடங்கின!
தேநீரைக் கொண்டுவந்த பணியாள்
நீங்கள் இந்த உலகத்தின்
அழகான ஜோடிகள் என்று வியந்து போனான்!
அங்கே ஒரு வில்லும் அம்பும் உடைந்து கிடக்க
அவர்கள் சிரித்துக் கொண்டார்கள்
தேநீர்க் கடையில் இப்போது
பூக்களையும் விற்றுக் கொண்டிருந்தார்கள்!



– முகமது பாட்சா

# ஹைக்கூக்கள்

ராஜலட்சுமி

எரிகின்ற அனலின் நடுவே
ஒரு புலம்பல்
விறகின் வலி....

மரங்களின் உயிரை
உண்ணுகிறது
மண்ணுள் நெகிழி பை...

புற்களில் நடுவே
ஒற்றை வரிசை கூட்டம்
எறும்பு சாலை....

ஏழைகளின் புலம்பல்
வானை எட்டியது
வறுமையால்...

மழையின் அழகை
ஊற்றுகிறது
கூரை சருவின் முனை...



# சிறகடிக்கும் பச்சைக்கிளி

● அமெரிக்க முத்தமிழ் ஹைக்கூ பேரவை நடத்திய 83 ஆவது கவிதைப் போட்டிக்கு வந்த ஹைக்கூக்களில் சில. பச்சைக்கிளியை வைத்துக்கொண்டு சிறகடிக்கின்றன நம் கவிஞர்களின் சிந்தனை.

பச்சைக்கிளி
பாசத்துடன் தேடுகிறது
பாவையர் உலகம்.

*அனீஸ் முஸ்தபா*

இரையைத் தேடி..
சிறகடித்து கிளி பறக்கிறது...
காத்திருக்கும் கூடு.

*இரமணி ராஜன்,*

மரக்கிளையில் சிறகுகள்
விடுபட இயலவில்லை
கிள்ளையிடமிருந்து கிளை

*ஜெ முகம்மது ஹபீபுல்லா*

விரித்த வலை
சிக்குப்பட்டுக் கிடக்கிறது
பச்சைக் கிளி

*ஐ. துஷ்யந்தன்*

கிளியின் சிறகுகள்
கூர்மையாக உள்ளன
வேலி முட்கள்.

*ஒசூர் மணிமேகலை*

மர இலைகள்
காற்றில் அசைகின்றன
கிளியின் இறக்கைகள்

*நஸீம் ஹனீபா*

பச்சைக் கிளியின் இறக்கை
மரக்கிளையில் மாட்டிக் கொண்டது
சிறுவர்கள் விட்ட பட்டம்.

*பொன்னி துரையப்பன்*

அசையும் சிறகுகள்
அருவருப்பு மூட்டுகின்றன
இலையில் நகரும் புழுக்கள்

*சாக்கை. பொன்னழகு*

கிளியின் தலை
சிவப்பாக இருக்கிறது
பழுத்த கோவைப்பழம்

*ம. பழனிச்சாமி*

கிளியின் சிறகு
மாட்டிக்கொண்டுத் தவிக்கிறது
தூண்டிலில் மீன்

*ஆ. முருகேசுவரி*

கிளியின் கால்கள்
இறுகப் பற்றி இருக்கின்றன
மரத்தில் கொடிகள்.

*பா. இராமர் தேனி மாவட்டம்*

கிளியின் உடல்
பல வண்ணங்களில் இருக்கின்றன
தோட்டத்து மலர்கள்.

*கவிஞர் கோவை ஆறுமுகம்*

இலையுதிர்கால மரம்
உதிர்ந்து கொண்டே இருக்கிறது
வயதான கிளியிறகு

*வ பரிமளாதேவி*

வலையில் கிளி
உணவின்றி காணப்படுகிறது
அடைகாக்கும் பறவை.

*தாழை. கு. சக்திவேல்*

அழகிய பஞ்சவர்ணக்கிளி
பார்ப்போரைப் பரவசப் படுத்துகிறது
வண்ணமயமான வானவில்.

*அன்பு துரைசாமி*

கிளியின் மூக்கு
மஞ்சளாக உள்ளது
வெயில் படும் இடம்

*ஓவியர். பால. மணிகண்டன்,*

சூரியன்
வெளிச்சக் கதிர்களை விரிக்கிறது
பச்சை கிளி.

*புஷ்பா குமார்*

மரத்தின் இலைகள்
மபச்சை நிறமாய்த் தெரிகிறது
பறக்கும் கிளி

*பொற்கேணி முளப்:.பர்*

கிளையில் பச்சைக்கிளி
விழுகிறது மனிதன் பார்வையில்
பிடித்தடைக்கும் கூண்டு.!

*செண்பக ஜெகதீசன்*

சிக்கிக்கொண்ட சிறகு
விடுவிக்க முயற்சி செய்கிறது
காற்று.

*மே.தேவி*

பச்சைக் கிளி
மரத்தில் சிக்கி விழுகின்றது
உதிர்ந்த இலை.

*அன்பழகன் தேவமலர்*

பச்சைக்கிளி வானில்
பறக்க எத்தனிக்கிறது
பட்டாம் பூச்சி

*ஆ கணேசன்*

மரக்கிளையில் ஒற்றைக்கிளி
பறக்க விழைகிறது
கூண்டுக்கிளி.

*முனைவர்.தங்க.ஜெயக்குமார்*

பறவையின் நகர்வு
கிளையின் மெல்லிய அசைவில்
தொங்கியபடி பாம்பு.

*சுமி முருகன்*

மரக்கிளையில் கிளி
பறக்க இயலவில்லை
ஒட்டிக்கொண்ட இலவம்பஞ்சு

*இரா. வேணுகோபாலகிருஷ்ணன்*

பழுங்கள் கொறிக்க
பச்சைக்கிளி முயற்சி
கிளைமுட்கள் தடுப்புசுவர்

*எம்.சீனி இப்ராஹிம்ஷா*

காற்றில் இறகு
பறந்து செல்கின்றது
பச்சைக்கிளி

*செல்லையா வாமதேவன்*

பச்சைக்கிளியின் வால்
நீண்டு வளர்ந்திருக்கிறது
மரத்தின் கிளைகள்

*கரிசல் ஆசிரியர் ச.லதாதேவி*

கிளியின் சிறகு
சிக்கிக் கொண்டது
முள்ளில் சேலை

*பிரியநிலா*

உதிரும் கனி
எழுந்து பறக்கிறது
பஞ்சவர்ணக் கிளி

*ரவிஜி*

பறக்க முயலும் கிளி
மாட்டிக் கொண்டது
மனிதன் கைகளில்

*பிரேமா ரமணி*

பச்சைக் கிளி
சிறகுகள் விரிக்கின்றன
பெண்ணின் கனவுகள்

*அறூபா அஹ்லா*

பச்சைக் கிளி
கொஞ்சிப் பேசுகிறது
அழகான குழந்தை.

*மு.நாகராஜன்*

பறக்க எத்தனைக்கும்
பச்சைக் கிளி
பறக்காமலா போகும்.

*சி,தமிழ்மணி,*

கிளையைத் தொடும் சிறகுகள்
பறக்க மறந்தது
கூண்டுக்கிளி

*சின்ன காஞ்சிபுரம் சீனிவாச வரதன்*

மாட்டிக் கொண்ட கிளி
உதவிக்காக காத்திருக்கிறது
முதியோர் உள்ளம்!

*கவிஞர் கவிதா அசோகன்*

கிளியின் சிறகுகள்
பசுமையை காணவில்லை
அமர்ந்திருக்கும் மரத்தில்!

*இளங்கோ இளங்கோவன்*

பச்சைக்கிளி பறந்திட
கிளைகள் அசைகின்றன
காற்றில்

*மலர் மைந்தன்*

# என்ன தவம் செய்தேன்?



**சரஸ்வதி பாஸ்கரன்**



உன்கண்கள் பேசுகின்ற ஊர்தனிலும் நானிருக்க
என்மொழிகள் ஊமையாகி என்னிதயம் பேசிடவும்
கன்னியுன்றன் காதலினால் கண்மயங்கி நான்வீழ
என்னதவம் செய்திட்டே னோ .

மண்நோக்கி நாணத்தால் மாலைசூட்டும் நாளெண்ணி
எண்ணமெலாம் நானாகி என்னுயிராய் நின்றவளை
வண்டமிழில் வர்ணிக்க வாலிபத்தின் வேட்கையினால்
திண்டாடும் என்றனையும் தீண்டு .

தீண்டிடுவாய் தேகத்தைத் தித்திக்கும் கன்னலாக
மாண்புநிறை தேவதையே மண்ணுலகில் என்றனுக்காய்
ஆண்டவனால் ஆத்மார்த்த அன்பினால்தான் வந்துதித்தாய்
மாண்டாலும் நீதான் மதிப்பு .

மதிப்புமிகு நெஞ்சத்தால் மாசற்ற கற்பால்
விதிதனையும் வெல்லுகின்ற வித்தகியாய் என்றன்
மதிமுகத்தாள் நீயாகி மாசறு பொன்னாய்
விதிவழியும் வந்திட்டாய் வீடு .

வீட்டிற்கு வந்திடுவாய் வீசுகின்ற தென்றலாகி
ஊட்டிடுவாய்க் காதலினை உன்னிதழின் முத்தத்தால்
தேட்டங்கள் வேண்டாவே தேகமது நொந்திடுவும்
பாட்டில் எடுத்துரைத்தேன் பாங்கு .

பாங்குடன் சொன்னமொழி பாவை பசலைக்குத்
தாங்கும் மருந்தாகும் தாவி யணைத்திடவும்
தூங்கும் மனத்தினில் தூங்காக் கனவுகளில்
ஏங்கும் உணர்வை யெழுப்பு .

எழுகின்ற உள்ளத்தின் ஏக்கத்தைத் தீர்க்க
வழுவிலா மங்கையுன்றன் வாசத்தால் வாட
பழுதிலாக் காதலினைப் பற்றிடுவாய் நாளும்
விழுப்புண்ணாய் மாற்றுவது மேன் .?

ஏன்தானோ என்றனையும் ஏற்க மறுக்கின்றாய்
ஊன்தன்னை விட்டுவிட்டே உன்மத்தம் கொண்டவனாய்த்
தேன்சொரியும் சோலையில் தேடுகின்றேன் கண்மணியைக்
கான்முழுதும் இக்காட்சிக் காண் .

காண்கின்ற வேளையினில் கண்ணில் மறைகின்றாய்
சீண்டுகின்ற நெஞ்சத்தால் சிட்டாய்ப் பறக்கின்றாய்
வேண்டுவன யாவுமிங்கு வேறெதுவு மில்லையடி
யாண்டுமுனை நாடிடுவே னே .

நானன்றி உன்றனையும் நாடிடுவர் யாருளரோ
மானன்றித் துள்ளும் மலர்முகமே மல்லிகையின்
தானமான வாசத்தின் தத்தைமணம் கொண்டவளாய்
ஏனடிநீ கொல்லுகிறாய் என்று .

என்னவளும் நீயடி என்னுயிரும் நீயடி
அன்புமனம் மாறாத ஆருயிரும் நீயடி
வன்முறைகள் காதலினில் வாட்டத்தைத் தந்திடும்
புன்னகை பூத்திடுவா யே.

கட்டி யணைத்திடக் காளைநான் காத்திருக்கப்
பட்டியும் தொட்டியும் பாதம் பதித்ததனைக்
கெட்டிமேளச் சத்தமாய்க் கேட்டிட என்செய்வேன்
விட்டு பிரிதல் விலக்கு .

விலகாதே கண்ணே விரைந்தோடி என்னுள்
மலர்ச்சரமாய்ப் பூத்திடுவாய் மாலையினைச் சூட
அலர்ந்திடும் அல்லி அகமகிழு முள்ளம்
உலராது காதல் உயிர்ப்பு .

உயிரான காதல் உணர்வில் கலக்க
பயிரான நெல்வயல்கள் பாத்தியும் கட்ட
தயிருடன் வெண்ணெய் தரமா யுருள
வெயிலில் நிழலாக வே .

வேட்கையும் தீராது வெந்தநெஞ்சம் மாறாது
சாட்சியாய் உன்நினைவு சல்லாபம் பேசிடும்
காட்சிகள் யாவும் கனவினில் கண்டிட
மாட்சிமை காதல் மலர்ந்து .



# அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்

பதிவு எண்: 202201061554843 / 9275709 IN-USA

## ADMISSION OPEN FOR ACADEMIC YEAR 2022

அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் செப்டம்பர் முதல் வாரத்திலிருந்து வகுப்புகள் நடைபெறவிருக்கிறது. உங்களுக்கு விருப்பமானப் பாடத்திட்டங்களை கீழ்க்கண்ட வலைதளப் பக்கத்தில் நீங்கள் தெரிவு செய்யலாம்.

**AVAILABLE COURSES:** www.americamutamiluniversity.org

- தன்முனைக் கவிதைகளின் பயிற்சியும் ஆய்வறிக்கையும்
- தமிழ் இலக்கணமும் பயிற்சியும்
- பழங்குடிகளின் மொழியியல் மற்றும் பண்பாடு
- Diploma in Naatiya Kalabhoosani
- Diploma in Social Work
- Certificate Course for Integrative Medicine
- Certificate Course for Leadership Qualities
- Certificate Course for Post Pregnancy Care

விண்ணப்பப் படிவத்தைப் பல்கலைக்கழக வலைதளத்திலே பதிவிறக்கம் செய்யலாம்..!

**தொடர்புக்கு:**

செல்: 91596 98466
99760 25731

தொலைபேசி: 04174 249192

---

அமெரிக்க முத்தமிழ்ப


பல்கலைக்கழக இரண்டாம் ஆண்டு பட்டமளிப்பு விழா

அக்டோபர் 22 ல் சென்னையில்.

அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவையின் ஆண்டு விழா

நவம்பர் 6 ல் திருச்சியில்...

## தமிழ் விருந்துக்குத் தயாராவீர்!


ஆயிரம் ஆயிரம்
திரவமுட்டைகளை
அடைகாக்கத் தெரியாத
சூரியன்
அத்தனை முட்டைகளையும்
உடைத்துவிட்டான்
புல்வெளியெங்கும்
பச்சைத் துயரங்கள்.
- ஈரோடு தமிழன்பன்